**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure.)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 243/2021**

**Prosecution Witness: 6**

| | | | |
|---|---|---|---|
| Name | : உசேன்கனி | Caste | : |
| Father 's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused present)

**01.08.2023**

**முதல் விசாரணை**

நான் வலையப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். கடந்த 12.01.2016 அன்று வலையப்பட்டி நாகரத்தினம் பெட்ரோல் பல்க் அருகே நடந்த விபத்து சம்மந்தமாக போலிசார் படம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தனர். நானும் நாகூர்உசேன் என்பவரும் பார்வை மகசரில் கையெழுத்து போட்டோம். மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ.3 ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்

**எதிரி தரப்பில் கு.வி.**

போலிசார் சம்பவயிடத்தில் இருந்த போதுதான் நான் அங்கு போனேன். எந்தெந்த வாகனம் மோதிக் கொண்டது என்று எனக்கு தெரியாது. அது வளைவான பகுதி என்றால் சரிதான். அங்கு என்னென்ன இருந்தது என்று எனக்கு ஞாபகம் இல்லை. சம்பவம் ரோட்டில் எந்த இடத்தில் நடந்தது என்று குறிப்பாக சொல்ல முடியுமா என்றால் சொல்லமுடியாது.